சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி - கூட்டுறவுத் தணிக்கைத் துறை – கருணை அடிப்படையில் பணிநியமனம் -திருமதி.பா.ஹமருன்பீ, கூட்டுறவுத் தணிக்கை அலுவலர், பணியிடை இறப்பு - அவரது வாரிசான திரு.எம்.ஷாஜஹான் என்பவருக்கு 09.10.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நிதி (கூட்டுறவுத் தணிக்கை)த் துறை

அரசாணை (நிலை) எண்.431

நாள்:27.11.2020,
சார்வரி கார்த்திகை -12,
திருவள்ளுவர் ஆண்டு - 2051.

படிக்கப்பட்டது:

1. அரசாணை(நிலை)எண்.100 பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த(எம்)த் துறை நாள் 01.08.2018.
2. கூட்டுறவுத் தணிக்கை இயக்குநர், அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.27031/2015/அபஅ-3, நாள் 03.10.2019.
3. அரசாணை(நிலை)எண்.18, தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020
4. கூட்டுறவுத் தணிக்கை இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.27031/2015/அபஅ.3, நாள் 05.09.2020.

* * * * *

ஆணை:-

கூட்டுறவுத் தணிக்கை இயக்குநர், மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், கரூர், கூட்டுறவுத் தணிக்கை உதவி இயக்குநர் கட்டுப்பாட்டில் கூட்டுறவுத் தணிக்கை அலுவலராகப் பணிபுரிந்து வந்தபோது பணிக்காலத்தில் 16.02.2006 அன்று இயற்கை எய்திய திருமதி.பா.ஹமருன்பீ என்பவரின் வாரிசான திரு.எம்.ஷாஜஹான் என்பவருக்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறை ஆணையின் வழி, கருணை அடிப்படையில், திருச்சி மண்டல

கூட்டுறவுத் தணிக்கை இணை இயக்குநர் அலுவலகக் கட்டுப்பாட்டில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டு, தனியர் 09.10.2019 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றார் என்றும், எனவே தனியரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான **09.10.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்து** ஆணை வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

2. திரு.எம்.ஷாஜஹான் **30.04.1976** அன்று பிறந்துள்ளார் தமிழ்நாடு அமைச்சுப் பணிக்கான குறைந்தபட்ச கல்வித் தகுதியான 10-ஆம் வகுப்பு தேர்வில் தேர்ச்சிப் பெற்றுள்ளார். கருணை அடிப்படையில் பணிநியமனம் தொடர்பான அனைத்து விதிகள்/ நிபந்தனைகளையும் நிறைவு செய்துள்ளார்.

3. அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், கூட்டுறவுத் தணிக்கை இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில், திருச்சி மண்டல கூட்டுறவுத் தணிக்கை இணை இயக்குநர் அலுவலகக் கட்டுப்பாட்டில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திரு.எம்.ஷாஜஹான் என்பவரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 09.10.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இதனால் எழக்கூடிய நிலுவைப் பணப்பயன்களை பெறத் தனியர் தகுதியுடையவர் ஆகிறார். தனியர், இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணி நியமனத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டுமென்பதை உறுதிசெய்யுமாறு கூட்டுறவுத் தணிக்கை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் (ம) வேலைவாய்ப்புத் துறையின் அ.சா.எண்.18171/க்யூ 1/2020-2, நாள்.21.11.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் அ.சா.எண்.31131/ஜி2/2020 நாள்.24.11.2020 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச.கிருஷ்ணன்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர் :
கூட்டுறவுத் தணிக்கை இயக்குநர், சென்னை-35.
(அனைத்து அசல் சான்றிதழ்களுடன்)
திரு.எம்.ஷாஜஹான், இளநிலை உதவியாளர் (இயக்குநர் மூலமாக)

நகல்
தொழிலாளர் (ம) வேலைவாய்ப்பு (க்யூ-1)த் துறை, சென்னை-09.
பணியாளர் (ம) நிருவாகச் சீர்திருத்த (ஜி-2)த் துறை, சென்னை-09.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

மொ.க்ஷ
28/11/2020

//பதிவஞ்சல் மூலம்//

கூட்டுறவு தணிக்கை இயக்ககம்,
சென்னை-35.
நாள்: 03.12.2020.

ந.க.எண். 27031/2015/அப.அ3

//தொடர்புறுத்தப்படுகிறது//

இயக்குநருக்காக.

4/12/2020

பெறுநர்:
திரு மு. ராஜகான் இணை உதவியாளர், திருச்சி மண்டலம் மூலமாக,
(கூட்டுறவு தணிக்கை இணை இயக்குநர், திருச்சி மண்டலம்)

நகல்: 1. கூட்டுறவு தணிக்கை இணை இயக்குநர், திருச்சி மண்டலம் அதன் (இவ்வரசாணையை தனியருக்கு வழங்கி) ஒப்புதலை நினைவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது
2. இயக்கக அப.அ2 பிரிவு,
3. இருப்புக்கோப்பு அப.அ3 பிரிவு.